# அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், ஈரோடு

## காலிப்பணியிடங்கள் நிரப்புதல் குறித்த அறிவிப்பு

அறிக்கை எண்.2739/அ2/2022 நாள்: 08.12.2022

அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் ஈரோட்டில் காலியாக உள்ள இரண்டு அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்பும் பொருட்டு கீழ்க்காணும் தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

காலிப்பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து பாஸ்போர்ட் அளவில் புகைப்படம் ஒட்டி பூர்த்தி செய்து குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் நகல்களை தன்கையொப்பமிட்டு (Self attested) இணைத்து முதல்வர், அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், காசிபாளையம், ஈரோடு–638009, என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.

### காலிப் பணியிட விவரம்:

| வ எ ண். | பதவியின் பெயர் | சம்பள விவரம் | வயது | கல்வித் தகுதி | காலி பணியிட விபரம் | மொத் தம் | இன சுழற்சி |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | அலுவலக உதவியாளர் | Level - 1 (Rs.15700 - 58100) | 18 வயது நிறைவு பெற்றிருக்க வேண்டும் (01.07.2022 அன்றைய நிலவரப்படி)<br>அ) GT – 32 வயது<br>ஆ) BC & MBC/DNC – 34 வயது<br>இ) SC, SC(A) & ST – 37 வயது<br>SSLC–க்கு மேல் கல்வித் தகுதியுடைய BC / MBC / SC / SC(A) / ST வகுப்பினருக்கு – உச்ச வயது வரம்பு இல்லை<br>முன்னாள் இராணுவத்தினர் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (SC / ST) – 53 வயதுக்குள்<br>முன்னாள் இராணுவத்தினர் – வகுப்பினர் / பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ( OC / BC / MBC ) – 48 வயதுக்குள்<br>மாற்றுத்திறனாளிகள் – வயது உச்ச வரம்புடன் கூடுதலாக 10 ஆண்டுகள் | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றி ருத்தல் வேண்டும் | 2 | 2 | 1.General Turn Priority<br>2.SCA Women (Destitute Widow) |

விண்ணப்பப்படிவம் மற்றும் விவரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் "முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், காசிபாளையம், ஈரோடு–638009" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள்: 30.12.2022 (மாலை 5.45) குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட நியமனத்திற்கு தகுதியான நபர்களை தேர்வு செய்யவோ, நேர்காணலை ஒத்தி வைக்கவோ, நியமன அறிக்கையை எவ்வித முன்னறிவிப்பின்றி இரத்து செய்யவோ – முதல்வர், அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஈரோடு அவர்களுக்கு முழு அதிகாரம் உள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**முதல்வர்**, அரசினர் தொழிற் பயிற்சி நிலையம்,
ஈரோடு.

வெ.ஆ.எண்.480/செ.ம.தொ.அ/ஒப்பந்தப்புள்ளி/2022

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**